BreastScreen NSW

B screened

# மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிக முக்கியம்

50 முதல் 74 வயதுடைய பெண்களுக்கு

## உங்களுக்குத் தெரியுமா?

மார்பகப் புற்று நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்ட 10 பெண்களில் 9 பேரின் குடும்ப வரலாற்றில் இந்நோய் இருந்ததில்லை.

உங்களாலோ அல்லது உங்கள் மருத்துவராலோ புற்றுநோய் கண்டறியப்படுவதற்கு அல்லது உணரப்படுவதற்கு அதிக காலத்திற்கு முன்பாகவே மார்பகக் கதிர்ப்படச் சோதனை (மார்பக எக்ஸ்ரே) புற்றுநோயைக் கண்டுபிடிக்கும். **ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்ட ஏறக்குறைய அனைத்து மார்பகப் புற்று நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட முடியும்.**

'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW'– வின் மார்பகக் கதிர்ப்படச் சோதனை இலவசமானது; அத்துடன் அது ஒரு **பெண் கதிர்ப்படப்பதிவாளராலேயே** மேற்கொள்ளப்படும்.

மார்பகச் சோதனை செய்து கொள்ள சந்திப்புவேளையை ஏற்பாடு செய்ய விரும்பும் பெண்களுக்கு உதவ **இலவச உரைபெயர்ப்பாளர் சேவை கிடைக்கும்.**

**கூட்டாகவும் முன்பதிவு செய்யப்பட முடியும்,** அத்துடன் கூட்டான முன்பதிவுகளுக்கு இலவச உரைபெயர்ப்பாளர் ஏற்பாடு செய்யப்படவும் முடியும்.

**உங்கள் மருத்துவரின் பரிந்துரை அவசியமில்லை,** எனினும் உங்களது சந்திப்புவேளைக்கு வரும் போது உங்கள் மருத்துவரின் விபரங்களை எடுத்துவரும்படி ஊக்குவிக்கின்றோம்.

**அழைத்து முன்பதிவு செய்து சோதனை செய்துகொள்ளவும்**

B screened

**13 20 50**

## 'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW' பற்றி

'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW' என்பது NSW- இல் 150 அமைவிடங்களைக் கொண்ட இலவச மார்பகச் சோதனைச் செயற்திட்டமாகும். ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் மார்பகப் புற்று நோயால் ஏற்படும் இறப்புகளை குறைக்கும் நோக்கில் இத்திட்டத்திற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் 1991 இலிருந்து நிதியுதவியளித்து வருகிறது.

**50 முதல் 74 வயது வரையான பெண்களுக்கு இச்செயற்திட்டம் விஷேடமாக** விதந்துரைக்கப்படுகிறது. எனினும் 40 வயதிற்கு மேற்பட்ட சகல பெண்களும் இத்திட்டத்தின் மூலம் பரிசோதிக்கப்படத் தகுதி பெறுவர்.

## எம்முடன் தொடர்பு கொள்க

உங்களுக்கு அண்மையிலுள்ள ஓர் அமைவிடத்தில் சந்திப்புவேளையொன்றை ஏற்பாடு செய்ய அழைக்க:

13 20 50

**மேலும் தகவல் அறிய**

breastscreen.nsw.gov.au

**ஓர் உரைபெயர்ப்பாளரின் உதவியைப் பெற**

13 14 50

facebook.com/BreastScreenNSW

BreastScreen NSW

NSW GOVERNMENT | Health

**13 20 50**

**2 ஆண்டுகளுக்கொருமுறை 20 நிமிடங்கள் உங்கள் உயிரைக் காக்க உதவலாம்**

breastscreen.nsw.gov.au

## மார்பகக் கதிர்ப்படச் சோதனை என்பது என்ன?

மார்பகக் கதிர்ப்படச் சோதனை என்பது பெண்ணொருவரின் மார்பகங்களை எக்ஸ்ரே எடுப்பதைக் குறிக்கும். 'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW' – இன் மார்பகக் கதிர்ப்படச் சோதனைகளானது தமது மார்பகங்களில் எவ்வித நோய் அறிகுறியையோ மாற்றத்தையோ அவதானிக்காத பெண்களுக்குரியதாகும்.

## எனக்கு ஒரு மார்பகக் கதிர்ப்படச் சோதனை அவசியமா?

ஆம். நீங்கள் 50 முதல் 74 வயதுடையவராயின் ஈராண்டுக்கொரு முறை ஒரு மார்பகக் கதிர்ப்படச் சோதனையை செய்து கொள்வதே மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான சிறந்த வழியாகும். அப்போதுதான் சிகிச்சை அனேகமாக வெற்றியளிக்கக் கூடியதாக இருக்கும்.

பிறந்த நாடு, பேசும் மொழி என்ற வேறுபாடின்றி மார்பகப் புற்று நோயானது எந்தவொரு பெண்ணையும் பாதிக்க முடியும். NSW –இலுள்ள பெண்களில் 8 இல் ஒருவருக்கு தாம் வாழும் காலத்தில் மார்பகப் புற்று நோய் இருப்பது கண்டறியப்படுகிறது, அவர்களில் அனேகர் 50 வயதிற்கு மேற்பட்டவர்களாவர்.

## மார்பகக் கதிர்ப்படச் சோதனையின் போது என்ன நடக்கும்?

உங்களுக்கான சந்திப்புநேரம் சுமார் **20 நிமிடங்கள்** அளவு இருக்கும். ஒரு நண்பர் அல்லது குடும்ப உறவினர் சோதனையகத்திற்கு உங்களுடன் கூட வருவது வரவேற்கத்தக்கது. நீங்கள் நிரப்பி எடுத்துவர வேண்டிய படிவங்களை நாம் உங்களுக்கு அனுப்பி வைப்போம். இது உங்களுக்கு சிரமமானதாக இருப்பின் எமது ஊழியர்களால் உங்களுக்கு உதவ முடியும்.

ஒரு **பெண் கதிர்ப்படப்பதிவாளர் உங்களை பிரத்தியேக எக்ஸ்ரே அறைக்கு அழைத்துச் செல்வார்.** அங்கு நீங்கள் உங்களது மேலாடையையும் மார்புக் கச்சையையும் அகற்றலாம். மார்பகக் கதிர்ப்படச் சோதனையின்போது கதிர்ப்படப்பதிவாளர் உங்களது ஒவ்வோர் மார்பகத்தையும் குறைந்தது 2 'எக்ஸ்ரே'–க்கள் எடுப்பார். எக்ஸ்ரே எடுக்கப்படும்போது உங்கள் மார்பு அழுத்தப்பட்டதாக இருக்கும். இவ்வழுத்தம் அசௌகரியத்தை ஏற்படுத்தலாம், எனினும் அது **மிகக் குறைந்த நேரத்திற்கே (சுமார் 10 வினாடிகள்) இருக்கும்.** மார்பின் அளவு எவ்வளவாயினும் எக்ஸ்ரே எடுக்கலாம்.

ஏதும் அசௌகரியத்தை உணர்ந்தால் அது பற்றி கதிர்ப்படப்பதிவாளரிடம் சொல்லவும். எவ்வேளையிலும் கதிர்ப்படச் சோதனையை நிறுத்த முடியும்.




## நான் 50 வயதிற்கும் குறைந்தவராக அல்லது 74 வயதிற்கும் கூடியவராக இருந்தால் கதிர்ப்படச் சோதனையை மேற்கொள்ள முடியுமா?

40 வயதிற்கு மேற்பட்ட சகல பெண்களும் ஓர் இலவச மார்பகக் கதிர்ப்படச் சோதனைக்காக 'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW' - யைத் தொடர்பு கொள்ளலாம்.

40 வயதிற்குக் குறைந்த பெண்களுக்கு இலவச மார்பக பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW கதிர்ப்படச் சோதனை கிடைக்காது. மார்பகக் கதிர்ப்படச் சோதனையின் மூலம் சிறியளவிலான புற்றினைக் கண்டறிவதை இளம் பெண்களின் அடர்த்தியான மார்பகத் திசு கடினமாக்குவதால் மார்பகச் சோதனை இளம் பெண்களுக்குப் பயனளிக்காது.

## மார்பகக் கதிர்ப்படச் சோதனை எந்தளவு பாதுகாப்பானது?

எந்தவொரு எக்ஸ்ரேயிற்கும் போல மார்பகக் கதிர்ப்படச் சோதனை எடுக்கப்படும் போதும் ஒரு சிறியளவு கதிரியக்கம் தேவைப்படும். **கதிரியக்கம் முலம் ஏற்படக் கூடுமான ஆபத்துக் கூறினை விட மார்பகக் கதிர்ப்படச் சோதனை மூலம் ஆரம்ப நிலையில் மார்பகப் புற்றினை கண்டறிவதன் பயன்பாடுகள் மிக அதிகமானதென்பதை** ஆய்வுகள் காட்டுகின்றன.

## மார்பகக் கதிர்ப்படச் சோதனையின் வரையறைகள் யாவை?

மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான சிறந்த வழி கதிர்ப்படச் சோதனையாகும். **எந்தளவு ஆரம்பத்தில் பெண்களில் மார்பகப் புற்று நோய் கண்டறியப்படுமோ அதிலேயே அதற்கான வெற்றிகரமான சிகிச்சையும் குணமடைவதும் தங்கியுள்ளது.** எனினும், ஏனைய பரிசோதனைகளில் போலவே கதிர்ப்படச் சோதனையும் 100% துல்லியமானதல்ல.

- கதிர்ப்படச் சோதனை செய்யப்பட்ட ஒருசில பெண்களுக்கு இறுதியான முடிவு வழங்கப்படுமுன் மேலும் சில சோதனைகள் செய்யப்பட வேண்டியிருக்கும். **கூடுதல் சோதனைகளுக்காக அழைக்கப்படும் 10 பேரில் 9 பேருக்கு மார்பகப் புற்று நோய் இருக்காது.**
- புற்று நோய் இருந்தபோதிலும், மார்பகக் கதிர்ப்படச் சோதனையில் அது தென்படாதிருப்பதற்கான ஒரு சிறிய வாய்ப்பும் உண்டு. எனினும் இது மிகவுமே அரிதாகும். **1000 இல் 1–இற்கும் குறைவான பெண்களுக்கே மார்பகக் கதிர்ப்படச் சோதனை செய்யப்பட்ட அடுத்த வருடத்தில் புற்று நோய் இருப்பதாகக் கண்டறியப்படும்.**
- **'பிரெஸ்ட் ஸ்கிரீன் NSW'** மூலம் **கண்டுபிடிக்கப்பட்ட சகல புற்று நோய்களும் சிகிச்சையளிக்கப்படாவிட்டால் அவை வளர்ந்து உயிராபத்தைத் தோற்றுவிக்கும்.** எனினும் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட சிறியதோர் எண்ணிக்கையான மார்பகப் புற்று நோய்கள் உயிராபத்தைத் ஏற்படுத்தாமலிருந்திருக்கலாம். தற்போதைய நிலையில் எந்த புற்று நோய் உயிராபத்தைத் தோற்றுவிக்கும், எது தோற்றுவிக்காது என சொல்ல முடியாது.

### சந்திப்பு வேளைகளுக்கிடையில் மார்பக நிலை பற்றி அறிந்திருக்கவும்.

1. உங்கள் மார்பகங்களைப் பற்றியும் அதன் சாதாரண தன்மை உங்களுக்கு எது என்பதையும் **தெரிந்துகொள்ளுங்கள்.** அடிக்கடி உங்கள் மார்பகங்களைக் கண்ணாடியில் பார்த்து அதனை உணர்ந்தறியுங்கள்.
2. உங்கள் மார்பகங்களில் **ஏதும் மாற்றத்தை அவதானித்தால்** (உ.ம் கட்டி, மார்பகக் காம்பில் நீர்க்கசிவு, தொடர்ச்சியான புதிய மார்பு வலி) உடனடியாக உங்கள் மருத்துவரைக் பார்க்கவும்.